# கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள்: யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் பிரிவை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**ஞா.சார்த்திகா, எ. பார்த்தீபா, சி.சிவகாந்தன்**
sskanthan@univ.jfn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

தீவிரமான சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பாதிக்கப்பட்ட சமூகக் குழுக்களில் கைவிடப்பட்ட பெண்கள் ஒரு பிரிவினராவர். வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் பிரிவில் வாழும் கைவிடப்பட்ட பெண்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை மதிப்பிடுவது ஆய்வின் பிரதான நோக்கமாகும். சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வில் கலப்புமுறை ஆய்வு வடிவத்தைப் பயன்படுத்தி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கணவனால் கைவிடப்பட்ட 294 பெண்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட கணியம்சார் தரவுகள் SPSS (version 21) உதவியுடன் விபரணப் புள்ளிவிபரவியல் மற்றும் அனுமானப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. விடய ஆய்வு முறைகள் மற்றும் பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் என்பவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. ஆய்வின் முடிவுகளின்படி பெரும்பாலானோர் (84%) இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாகவும் 58.2% ஆனவர்கள் 15-45 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். பெரும்பாலானோர் (76.9%) இடைநிலைக்கல்வியைப் பூர்த்தி செய்துள்ளனர். கைவிடப்பட்ட பெண்கள் பலரின் பிரதான வாழ்வாதாரமாகக் கூலித்தொழில் (46.9%) காணப்பட்டதுடன் 62% க்கும் அதிகமானோரின் குடும்பத்தின் மாதாந்த மொத்த வருமானம் 20,000 இலங்கை ரூபாய்க்கும் குறைவாக இருந்தது. சமூகக் குடித்தொகைக் காரணிகளான வயது ($p=0.001$) கல்வி ($p = 0.001$) மற்றும் வருமானம் ($p = 0.001$) என்பன பங்குபற்றுநர்களின் தொழில் நிலையில் புள்ளிவிபரவியல் ரீதியாகக் குறிப்பிடத்தக்க நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. கணவனால் கைவிடப்படுவதற்கான முக்கிய காரணங்களாக, குடும்ப ஆதரவு மற்றும் பராமரிப்பின்மை (72%), குடும்ப உறுப்பினர்களிடையே புரிந்துணர்வின்மை (62.8%) கணவரின் இரண்டாந்தரத் திருமணம் (47.6%) திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் (28.9%), சீதனப் பிரச்சினைகள் (10.5%) மற்றும் கடன் பிரச்சினைகள் (11.9%) போன்றன காணப்பட்டன. அத்துடன் பாதுகாப்புப் பிரச்சினைகள் (4.4%), பாலியல் அச்சுறுத்தல்கள் (15.3%), சமூக நிகழ்வுகள் மற்றும் சமூகச்செயற்பாடுகளில் புறக்கணிக்கப்படுதல் (21%), குறைந்தளவான வருமானம் மற்றும் வறுமை போன்றன கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க சமூகப்பிரச்சினைகளாகக் காணப்பட்டன.

**திறவுச்சொற்கள்:** சீதனம், சுரண்டல், பாரபட்சம், பொருளாதாரப் பாதுகாப்பின்மை, வறுமை

### ஆய்வு அறிமுகம்

பொதுவாகப் பெண் தலைமைக் குடும்பங்களை வரையறுக்கும் போது சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கருத்தின்படி வயது வந்த ஆண்கள் இல்லாத, விவாகரத்துச் செய்யப்பட்ட, பிரிந்து வாழ்கின்ற, திருமணம் ஆகாத, குடிபெயர்ந்து வாழ்கின்ற, குடிப்பழக்கம், நோய், முதுமை மற்றும் இயலாமை போன்ற காரணங்களால் குடும்ப வருமானத்திற்கான பங்களிப்பை வழங்க முடியாத ஆணைக் கொண்ட மற்றும் குடும்ப உடைவினால் தனித்து வாழ்கின்ற நிலைமைகளினால் பெண் தலைமைக் குடும்பங்கள் தோற்றம் பெறுகின்றன (Gayathri, 2018 ; ILO, 2007). இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் எண்ணிக்கை அண்மைக் காலம் முதல் குறிப்பிட்ட அதிகரிப்பினைக் காட்டுகின்றது. அத்துடன் 1981ஆம் ஆண்டில் இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் எண்ணிக்கை 17.4% ஆகக் காணப்பட்டது (Ruwanpura and Humphries,2003). மேலும் 2016ஆம் ஆண்டில் இலங்கையின் வீட்டலகுகளின் வருமான மற்றும் செலவின அளவீட்டின் படி (Household Income and Expenditure Survey) 5.4 மில்லியன் குடும்பங்களில் 1.4 மில்லியன் (25.8%) பெண்தலைமைக் குடும்பங்கள் காணப்பட்டன (Gayathri, 2018).

உலகளவில் பெண்கள் கணவனால் கைவிடப்படுகின்ற நிலையானது மேலைத் தேச மற்றும் ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் ஆசிய நாடுகளில் அதிகமாகக் காணப் படுகின்றது (National Institute of Public Cooperation and Child Development, 2007). மேலும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அதிகம் வாழும் நாடுகளாக இந்தியா, பங்களாதேஸ், நேபாளம் மற்றும் இலங்கை போன்ற நாடுகள் காணப் படுகின்றன. தென்னாசிய நாடுகளிலும் மற்றும் அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளிலும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர் (Ahmed and Ahmmed, 2015). யாழ்ப்பாண மாவட்டத்தில் 36, 318 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 8,435 குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6,714 குடும்பங்களும் மன்னார் மாவட்டத்தில் 5,903 குடும்பங்களும் பெண்களைத் தலைமையாகக் கொண்டுள்ளன (Department of Social Services Statistics in Nothern Province, 2018). யாழ்ப்பாண மாவட்டத்தில் 5,141 கணவனால் கைவிடப் பட்ட பெண்கள் காணப்படுகின்றனர் (யாழ்ப்பாண மாவட்டசெயலக அறிக்கை, 2018). வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் 294 கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இனங்காணப் பட்டுள்ளனர் (வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் அறிக்கை, 2018).

### ஆய்வு வினாக்கள்

- பெண்கள் கணவனால் கைவிடப் பட்டமைக்கான காரணங்கள் யாவை?
- கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எத்தகைய சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்?
- கணவனால் கைவிடப்பட்ட பெண் களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங் கப்பட்ட போதிலும் ஏன் அவர்கள் தொடர்ச்சியாக, பாரதுாரமான பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்?
- கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சமூகத்தில் எத்தகைய சந்தர்ப்பங் களில் பாகுபடுத்தப்படுகின்றார்கள்?

### ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் 26 வருடங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தமானது உயிரிழப்புக்கள் மற்றும் பொருட்சேதம் என்பவற்றை

ஏற்படுத்தியுள்ளதுடன் பல பெண் தலைமைக் குடும்பங்களின் உருவாக்கத்திற்கும் காரணமாய் அமைந்துள்ளது (United Nations. Sri Lanka, 2015). ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் ஆசிய நாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றது. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அதிகமாக வாழும் நாடாக இந்தியா இனங்காணப்பட்டுள்ளது (National Institute of Public Cooperation and Child Development, 2007). தென்னாசிய நாடுகளிலும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிலும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர் (Ahmed and Ahmmed, 2015). வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் 36,318 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 8,435 குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6,714 குடும்பங்களும் மன்னார் மாவட்டத்தில் 5,903 குடும்பங்களும் பெண்களைத் தலைமையாகக் கொண்டுள்ளன (Department of Social Services Statics in Nothern Province, 2018). யாழ்ப்பாண மாவட்டத்தில் 5,141 கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் காணப்பட்டுள்ளனர் (யாழ்ப்பாண மாவட்ட செயலக அறிக்கை, 2018). அத்துடன் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் 294 கணவனால் கை விடப்பட்ட பெண்கள் காணப்படுகின்றனர் (வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் அறிக்கை, 2018).

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்கின்ற சமூகப்பிரச்சினைகளாக குறைவான கல்வியறிவு, பாலியல் துஸ்பிரயோகம், முதலாளிமாரின் வாய்மொழி மூலமான துஸ்பிரயோகம், சந்தேகிக்கப்படல், சமூக ஆதரவின்மை, குடும்பத்தைப் பாதுகாப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளல், சமூகப்பாதுகாப்பின்மை மற்றும் சுதந்திரமின்மை போன்றன காணப்படுகின்றன (Ahmed, 2018). பாதுகாப்பின்மை, அதிகாரத் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாதல், குடும்ப ஆதரவை வழங்க முடியாமை, திருமணத்திற்கு அப்பாலான உறவுகள், கல்வியறிவு மற்றும் திறனின்மை, அடையாளங்கள் வெளிப்படுத்தப்படாமை, பால்நிலை சார்ந்த வேறுபாடு, சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டுதல், பாலியல் துன்புறுத்தல் மற்றும் குழந்தைகளைப் பராமரித்தலில் சிரமத்தை எதிர்கொள்ளல் போன்ற சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் (Ahmed and Ahmmed, 2015). அத்துடன் சமூக அங்கீகாரம் இன்மை, தற்கொலை, பிற குடும்பத்தில் தங்கியிருத்தல், கௌரவ இழப்பு, மனச்சுமை மற்றும் குறைவான சுயமதிப்பு போன்ற சமூகப்பிரச்சினைகளை கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்கின்றனர்.

பொருளாதாரப் பிரச்சினைகளாக கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை, ஊதியச்சுரண்டல், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படல், ஊதியப்பாகுபாடு, வேலைவாய்ப்பின்மை, அதிக சந்தை விலைகள், விரும்பிய மற்றும் போசாக்கான உணவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமை, நிதி நெருக்கடி மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பின்மை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் (Ahmed, 2018). வறுமை, சொத்துக்கள் தொடர்பான விடயங்கள், வருமானமின்மை, சொத்துக்களைக் கையாள்வதில் சிரமம் போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் (Kulkarni and Bhat, 2010). மேலும் கடன்களை மீளச்செலுத்த முடியாமை, தொழில் திறனின்மை, நிரந்தரத் தொழிலின்மை, தொழில் அனுபவமின்மை, கடன்சுமை போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளையும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்கின்றனர்.

பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வது மறுக்கப்படல், உளரீதியாகப் பாதிக்கப் படல், கல்வியில் ஆர்வம் இன்மை, சிந்தனை மற்றும் நடத்தை முறைகளில் மாற்றம், மன அழுத்தத்திற்கு உட்படல் மற்றும் பாடசாலைகளில் பாரபட்சப்படுத் தப்படல் (முகாம் குழந்தைகள்) போன்றன காணப்படுகின்றன (Fokus Women, 2015). சமூகமயப்படுத்தப்படாமை, சிறுவர்கள் இளங்குற்றவாளிகளாதல், இடத்திற்கு இடம் நகர்தல்(Vagabonds), கல்வி கற்பதிலிருந்து இடைவிலகல், குறைந்த கல்வித்தகைமை, பொருளாதார அழுத்தங்களை எதிர் கொள்ளல், சிறுவர் தொழிலாளிகளாதல், வருமானமீட்டல் செயற்பாடுகளில் ஈடுபடல், சிறுவர் திருமணம், தொந்தரவிற்கு உட்படல் மற்றும் புறக்கணிக்கப்படல் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் (Asagi and et al, 2012). ஆய்வுப் பிரதேசமான வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் பிரிவில் கைவிடப்பட்ட பெண்கள் பல்வேறுபட்ட சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் இளவயதுக்கர்ப்பம், பாதுகாப்பின்மை, கல்விக்கான செலவீனம் அதிகரிப்பு, விலகல் நடத்தைகள், சட்டவிரோதத் தொழிலில் ஈடுபடல் மற்றும் போதைப் பொருட்பாவனைக்கு உட்படல் போன்ற விளைவுகளையும் எதிர்கொள்கின்றனர்.

## ஆய்வு நோக்கங்கள்

### பொது நோக்கம்

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் பிரிவில் கணவனால் கைவிடப் பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை மதிப்பிடல்.

### சிறப்பு நோக்கங்கள்

- ♦ பெண்கள் கணவனால் கைவிடப்பட்ட மைக்கான காரணங்களை இனங்காணல்.
- ♦ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் பிரதானமான சமூகப் பிரச்சினைகளை இனங்காணல்.
- ♦ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை விபரித்தல்.
- ♦ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்கின்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும், சமூகக் குடித் தொகைக் காரணிகளுக்கும் இடை யிலான இணைவினை விபரித்தல்.
- ♦ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்குப் பயன்படுத்தும் சமாளிக்கும் பொறிமுறைகளுக்கும், சமூகக் குடித் தொகைக் காரணிகளுக்கும் இடை யிலான இணைவினை மதிப்பிடுதல்.

## ஆய்வு முறையியல்

### ஆய்வுப் பிரதேசம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வட மராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் பிரிவு ஆய்வுப் பிரதேசமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் அதிகளவிலான கை விடப்பட்ட பெண்களை உள்ளடக்கிய மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டம் முதன்மை பெறுகின்றது. இங்கு சுமார் 36,318 கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் காணப்படுகின்றனர் (Department of Social Services Statistics in Nothern Province, 2018). வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் பிரிவில் 294 கைவிடப்பட்ட பெண்கள் வாழ்கின்றனர் (வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலக அறிக்கை, 2018). வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசசெயலகமானது 26 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி யுள்ளது. இங்கு 14,849 குடும்பங்கள் காணப்படுகின்றன. இப்பிரிவிலுள்ள மக்கள் தொகை 45,658 ஆகும். 21,980 ஆண்களும்

23,501 பெண்களும் காணப்படுகின்றனர் (வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலக அறிக்கை, 2018). அதன் அடிப்படையில் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் ஆய்வுப் பிரதேசமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

**ஆய்வு வடிவமைப்பு**

சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வில் கலப்பு முறை (mixed method) ஆய்வு வடிவத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் சிக்கலான சமூகப் பிரச்சினைகளான களங்கம், பாதிப்புறு நிலைகள், சமூகப் பாகுபாடு, கைவிடப்பட்ட பெண்கள் தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்கள், உணர்ச்சிகள் மற்றும் சமாளிக்கும் உத்திகள், பால்நிலை அடிப்படையிலான பாகுபாடு, ஆதரவு வலையமைப்புகள் இன்மை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளான வருமான நிலைகள், கடன்கள், நலன்புரி உதவிகளுக் கான அணுகல், வேலைவாய்ப்பு இன்மை, வறுமை போன்ற பொருளாதாரப் பிரச்சினை களின் அளவையும் தீவிரத்தையும் புள்ளி விவரவியல் முறையில் ஆய்வு செய் வதற்காக கலப்பு முறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மாதிரியும் மாதிரிப் பருமனும்**

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் பொருளா தாரப் பிரச்சினைகள் என்ற ஆய்வுத் தலைப்பிற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் பிரிவில் 294 கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் காணப்படுகின் றனர் (வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலக அறிக்கை, 2018). அந்தவகையில் கணவனால் கைவிடப்பட்ட 294 பெண்களும் ஆய்வில் தெரிவுசெய்யப்பட்டுள்ளதனால் எந்தவித மாதிரி முறையும் பயன்படுத்தப் படவில்லை.

**தரவு சேகரிப்புக் கருவிகள்**

முதன்நிலைத் தரவு சேகரிப்புக் கருவிகள்

**விடய ஆய்வு**

கணவனால் கைவிடப்பட்ட பெண்களிடம் 10 விடய ஆய்வுகளும், கணவனால் கைவிடப் பட்ட பெண்களின் பிள்ளைகளிடம் 4 விடய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பிரதான தகவல் வழங்குநருடனான நேர் காணல்**

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர் கொள்ளும் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களுக் கான பிரதான தகவல் தருநருடனான ஆழமான நேர்காணல் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து**

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கணவனால் கைவிடப்பட்ட 10 பெண்களிடம் வினாக் கொத்தானது பூர்வாங்க ஆய்வு (Pilot study) மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத் தைச் சேர்ந்த 294 கணவனால் கைவிடப்பட்ட பெண்களிடம் வினாக் கொத்து மூலம் அளவறிசார் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**இரண்டாம்நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகள்**

மாவட்ட செயலகத் தரவுகள், பிரதேச செயலகத் தரவுகள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளங்கள் போன்ற தரவு மூலங்களிலிருந்து இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### ஆய்வு நெறிமுறைகள்

ஆய்வுச் செயன்முறையின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. மேலும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட பெண்களிடம் அறிந்து அளிக்கப்பட்ட எழுத்து மூலமான ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே தரவுகள் பெறப்பட்டன. தரவுகளின் இரகசியத்தன்மை பூரணமாகப் பேணப்பட்டதுடன் தரவுகள் முற்று முழுதாகக் குறிப்பிட்ட ஆய்விற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

### பெறுபேறுகளும் கலந்தாராய்தலும்

வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட கணியம்சார் தரவுகள் விபரணப் புள்ளி விபரவியல் மற்றும் அனுமானப் புள்ளி விபரவியல் பகுப்பாய்வு முறையில் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதி (SPSS 21) உதவியுடன் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டும் ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான பண்புசார் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக, பிரவுன் மற்றும் கிளார்க் ஆகியோரின் அணுகுமுறையைப் பின்பற்றி கருப்பொருள் பகுப்பாய்வு (Thematic Analysis) மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, விடய ஆய்வுகள் மற்றும் நேர்காணல் ஆகியவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவுகள் முறையாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அவற்றின் மூலக் கருத்துகள் உள்வாங்கப்பட்டன. பின்னர், "கணவனால் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள்," "பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகள்," "கணவனால் கைவிடப்பட்டவர்களின் பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்," "சமூக நிகழ்வுகளில் பங்கேற்பு," "வருமானமின்மை," "கடன் பிரச்சினைகள்," "களங்கம்," மற்றும் "குடும்பப் புறக்கணிப்பு" போன்ற ஆரம்பக் குறியீடுகள் உருவாக்கப்பட்டன.

இந்தக் குறியீடுகள் பின்னர் விரிவான வகைகளாக (categories) ஒழுங்கமைக்கப் பட்டு, கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் உண்மை அனுபவங்களைப் பிரதிபலிக்கும் மேலோட்டமான கருப்பொருள்களாக (overarching themes) மாற்றியமைக்கப் பட்டன. இத்தகைய குறியீட்டு மற்றும் கருப் பொருள் உருவாக்கத்தின் தொடர்ச்சியான செயல்முறையானது (iterative process), ஆய்வின் முடிவுகளானது பங்கேற்பாளர் களின் குரல்களினை அடிப்படையாகக் கொண்டவை என்பதை உறுதி செய்ததுடன், சமூக மற்றும் பொருளாதார சவால்கள் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளன என்பதையும் வெளிப்படுத்தியது. இதன் மூலம், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் பன்முகப் பிரச்சினைகளை ஆழமான முறையில் பகுப்பாய்வு மேற்கொள்ள முடிந்தது.

### கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் சமூக மற்றும் குடித்தொகைக் குணவியல்புகள்

அட்டவணை 01 இன் படி 36 - 45 வயதிற்கிடைப்பட்ட பெண்களே அதிகளவில் கணவனால் கைவிடப்பட்டுள்ளனர். அத்துடன் 15-25 வயதிற்கு உட்பட்ட பெண்கள் குறைவான அளவில் கணவனால் கைவிடப்பட்டவர்களாகக் காணப்படுவதுடன் கைவிடப்பட்டவர்களில் 84.1% ஆனவர்கள் இந்து மதத்தினைப் பின்பற்றுபவர்களாகக் காணப்பட்டுள்ளனர். அதிகளவிலான பெண்கள் கூலித் தொழில் செய்பவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் 10000உம் 10000 ரூபாய்க்குக் குறைவான மாத வருமானம் பெறும் பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

**அட்டவணை 1**

*சமூக மற்றும் குடித்தொகைக் குணவியல்புகள்*

| விடயம் | | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|---|
| வயது (வருடங்கள்) | ≤ 25 | 05 | 1.70 |
| | 26-35 | 68 | 23.12 |
| | 36-45 | 98 | 33.34 |
| | 46-55 | 97 | 33.00 |
| | 56-65 | 26 | 8.84 |
| | மொத்தம் | 294 | 100.0 |
| மதம் | இந்து | 247 | 84.01 |
| | கிறிஸ்தவம் | 47 | 15.09 |
| | மொத்தம் | 294 | 100.0 |
| கல்விநிலை | பாடசாலைக்குப் போகவில்லை | 01 | 0.34 |
| | 1-5 (ஆரம்பக்கல்வி) | 55 | 18.70 |
| | 6-11 (இடைநிலைக்கல்வி) | 226 | 76.88 |
| | க.பொ.த உயர்தரம் | 12 | 4.08 |
| | மொத்தம் | 294 | 100.0 |
| தொழில் விபரம் | சுயதொழில் | 40 | 13.60 |
| | வியாபாரம் | 37 | 12.58 |
| | கூலி | 138 | 46.95 |
| | வீட்டுவேலை | 07 | 2.38 |
| | அரச தொழில் | 08 | 2.72 |
| | தனியார் தொழில் | 45 | 15.31 |
| | விவசாயம் | 19 | 6.46 |
| | மொத்தம் | 294 | 100.0 |
| குடும்பத்தின் மொத்த மாத வருமானம்(LKR) | ≤ 10000 | 106 | 36.05 |
| | 10001-20000 | 77 | 26.19 |
| | 20001-30000 | 77 | 26.19 |
| | 30001-40000 | 32 | 10.89 |
| | 40001-50000 | 02 | 0.68 |
| | மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்:களஆய்வு, வினாக்கொத்து)

**திருமணத்தின் பின்னர் கணவனால் கைவிடப்பட்ட காலப்பகுதி**

**அட்டவணை 2**

*சமூக மற்றும் குடித்தொகைக் குணவியல்புகள்*

| கணவனால் கைவிடப்பட்ட காலப்பகுதி (வருடங்களில்) | எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|
| ≤ 5 | 115 | 39.12 |
| 6-11 | 100 | 34.01 |
| 12-17 | 48 | 16.33 |
| 18-23 | 12 | 4.08 |
| 24-29 | 09 | 3.06 |
| >29 | 10 | 3.40 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: களஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 02 இல் 5 மற்றும் 5 வருடங்களுக்குள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மிக அதிகமானவர்களாகக் (39.12%) காணப்படுகின்றனர். அத்துடன் 24-29 வருடங்களுக்குள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மிகக் குறைவானவர்களாகக் (3.06%) காணப்படுகின்றனர். இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. "அம்மா அப்பாவை பேசித் தான் கலியாணம் கட்டினவாவாம். 10 வருசம் தான் அப்பாவோட நிம்மதியா இருந்தவா. இப்ப அப்பா விட்டுட்டுப்போய் 5 வருசம் ஆகிட்டுது, அப்பா விட்டுட்டுப் போனதிலிருந்து அம்மம்மா வீட்டில தான் இருக்கிறம்" (விடய ஆய்வு 11).

**மனைவி கணவனால் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள்**

**அட்டவணை 3**

*மனைவி கணவனால் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் (பல் தெரிவுகள்)*

| மனைவி கணவனால் கைவிடப்பட்டமைக்கான காரணம் | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|
| சீதனம் | 31 | 5.0 |
| கணவனின் இரண்டாந் திருமணம் | 140 | 22.7 |
| திருமணத்திற்கு அப்பாலான உறவு | 85 | 13.8 |
| கடன் | 35 | 5.7 |
| சொத்துக்களின்மை | 29 | 4.7 |
| குடும்பத்தைப் பராமரிக்க முடியாமை | 77 | 12.5 |
| குடும்ப உறுப்பினர்களிடையே முரண்பாடு | 98 | 15.9 |
| பரஸ்பர புரிந்துணர்வின்மை | 101 | 16.4 |
| பிள்ளைகள் இல்லாமை | 08 | 1.3 |
| கணவனின் மதுப்பாவனை | 13 | 2.1 |
| மொத்தம் | 617 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 03 இன்படி மனைவி கணவனால் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் பற்றி நோக்குகின்றபோது அதிகமான பெண்கள் (22.7%) கணவனின் இரண்டாந் திருமணத் தினால் கைவிடப்பட்டுள்ளனர். அத்துடன் மிகக் குறைவானவர்கள் (1.3%) பிள்ளைகள் இல்லாமை காரணமாக கணவனால் கைவிடப்பட்டுள்ளனர்.

Kulkarni (2010) என்பவரின் ஆய்வு முடிவுகளின் படி கணவனின் இரண்டாம் திருமணம் அல்லது திருமணத்திற்கு அப்பாலான உறவுகளினால் 19.28% ஆனவர்களும் உள, உடல் ரீதியான துன்புறுத்தல்களினை கணவனினாலும் அவரது குடும்பத்தினாலும் அனுபவித் தவர்களாக 5.3% ஆனவர்களும் சீதனம் கோருதலினால் 4.3% ஆனவர்களும் ஆண் குழந்தை இன்மை அல்லது குழந்தைகள் இன்மையினால் 7.2% ஆனவர்களும் கைவிடப்பட்டுள்ளனர். கைவிடப்பட்ட வர்களில் 24.79% ஆனோர் மதுப் பாவனை மற்றும் துன்புறுத்தல்களினால் கைவிடப் பட்டவர்களாகக் காணப்படுகின்றனர் (Kulkarni, 2010)

**சீதனப்பிரச்சினை காரணமாக பெண்கள் கணவனால் கைவிடப்படுதல்**

அட்டவணை 04 இல் கணவனால் கை விடப்பட்டமைக்கான காரணங்களைப் பற்றி நோக்கும்போது 10.5% ஆனவர்கள் சீதனப் பிரச்சினையின் காரணமாகக் கைவிடப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைப் பண்புசார் தரவுகளும் உறுதிப் படுத்துகின்றன. "கலியாணம் செய்து கொஞ்ச காலத்தால அவற்ற தாய் அவரை சீதனம் கேட்கச் சொல்லி வற்புறுத்தத் தொடங்கிட்டா அதால அவர் என்ர வீட்டுக் காரரோட சண்டை போட்டு என்ர வீட்டுக்காரர வீட்டை விட்டு வெளிக்கிடுத்தி விட்டுட்டார். வீடு சீதனமாக் குடுத்திட்டு அப்பாவும் அம்மாவும் வெளிக்கிட்டுப் போட்டினம். பிறகு சீதனம் கேட்டு என்னை வற்புறுத்தத் தொடங்கிட்டார்" (விடய ஆய்வு 05).

**அட்டவணை 4**

*சீதனப்பிரச்சினை*

| விடயம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 31 | 10.5 |
| இல்லை | 263 | 89.5 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

**இரண்டாந் திருமணம் காரணமாக பெண்கள் கணவனால் கைவிடப்படுதல்**

**அட்டவணை 5**

*இரண்டாந் திருமணம்*

| விடயம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 140 | 47.6 |
| இல்லை | 154 | 52.6 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 05 இல் கணவனால் கைவிடப் பட்ட பெண்கள் கைவிடப்பட்டமைக்கான காரணங்களைப் பற்றி நோக்கும் போது 47.6% ஆனவர்கள் தமது கணவரின் இரண்டாந் திருமணத்தின் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள் ளனர்.

இதனைப் பண்புசார் தரவுகளும் வலுப் படுத்துகின்றன. "என்ர மனுசன் வெளி நாட்டில நிண்டவர், அவர் அங்கயும் கலியாணம் செய்திருக்கிறார் எனக்கு மறைச்சுப் போட்டார் (விடய ஆய்வு 04). "நான் வேற பெட்டையை கலியாணம் கட்டிட்டன் உன்னோட இனி வாழ மாட்டன் எண்டு சொல்லிட்டார் (விடய ஆய்வு 06).

**திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் காரணமாகப் பெண்கள் கணவனால் கைவிடப்படுதல்**

**அட்டவணை 6**

*திருமணத்திற்கு அப்பாலான உறவு*

| விடயம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 85 | 28.9 |
| இல்லை | 209 | 71.1 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 06 இல் கணவனால் கைவிடப் பட்டமைக்கான காரணங்களைப் பற்றி நோக்கும்போது 28.9% ஆனவர்கள் தமது கணவரின் திருமணத்திற்கு அப்பாலான உறவின் காரணமாக கைவிடப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகள் காணப்படு கின்றன "இவன் கள்ளன் பிள்ளைக்கு டச் போனையும் வாங்கிக் குடுத்து ஊத்தப் படங்களையெல்லாம் பிள்ளைக்குக் காட்டி தன்ர பக்கம் இழுத்திட்டான். இதுக்குப் பிறகும் பிள்ளை திருந்தவே வாய்ப்பில்லை. ஏனென்டா பிள்ளைன்ர வயது அது. இப்பிடிப் படங்களைக் காட்டினால் பிள்ளை அவனில தானே பாசம் வைக்கும் அவனை விட்டுப் போகாது எங்கேயும். சாட்டுக்கு குழந்தையையும் கொண்டு எங்கேயேனும் சுத்திட்டு வருவினம் (விடய ஆய்வு 01).

"அவருக்கு நிறைய கேள் பிறன்ட்ஸ் இருக்கு போனில நட்பைப் பேணிவந்திருக்கிறார். அந்த பிறண்ட்ஸ்க்கு தான் கலியாணம் செய்யல எண்டு சொல்லியிருக்கிறார். போனில பேஸ்புக் யூஸ் பண்ணுறார். பாக்கக் கேட்டால் தரமாட்டார். பிறண்ட்ஸ் எண்டு சொல்லி எல்லாரோடையும் கதைப்பார். ஒரு நாள் எதேச்சையா இவர் பொம்பிளையளோட இருந்த போட்டோக்கள் பேஸ்புக்கில வந்தது. பொலிஸ் கூப்பிட்டு கேஸ் எல்லாம் எடுத்தவை, என்னையும் கூப்பிட்டு விசாரிச்சதோடை கள்ளவேலை எல்லாம் வெளிப்படுத்தினவை, இப்பவும் அவன் திருந்தாமல் அதே வேலையைத் தான் செய்யிறான், அதனால இவர் குழப்படி நெடுகலும் சண்டை இவர் திருந்துற பாடு இல்லை. நான் இவரை விட்டு பிரிஞ்சு அம்மா வீட்ட வந்துட்டன்" (விடய ஆய்வு 04). இப்பண்புசார் தரவானது கருப்பொருள் பகுப்பாய்வின் ஒரு உள்ளடக்கமான திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் என்ற கருப்பொருளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**கடன் பிரச்சினை காரணமாகக் கணவனால் கைவிடப்படுதல்**

**அட்டவணை 7**

*கடன் பிரச்சினை*

| விடயம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 35 | 11.9 |
| இல்லை | 259 | 88.1 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 07 இல் கணவனால் கைவிடப் பட்ட பெண்கள் கைவிடப்பட்டமைக்கான காரணங்களைப் பற்றி நோக்கும்போது 11.9% ஆனவர்கள் கடன் பிரச்சினை காரண மாகக் கைவிடப்பட்டுள்ளதாகக் குறிப் பிட்டுள்ளனர்.

இதனைப் பண்புசார் தரவுகளும் உறுதிப்படுத்துகின்றன. "தனக்குத் தெரிஞ்ச சந்தையில வேலை செய்யுற ஆட்களோட சீட்டுப் பிடிக்கத் தொடங்கினார். இரண்டு லட்சம், மூண்டு இலட்சம் எண்டு சீட்டுப் பிடிக்க வெளிக்கிட்டு கடைசில சீட்டுக் காரன்கள் ஏமாத்திட்டு காசுகளைக் கொண்டு வெளிநாட்டுக்கு ஓடிட்டாங்கள், இவரிட்ட கடன் ஏறத்தொடங்கிட்டு உழைக்கிற காசு

எல்லாத்தையும் சீட்டுக்குக் கட்டத் தொடங்கிட்டார் வான் காசு கட்டமுடியாமத் தான் வீட்டை விப்பம் எண்டு முடிவெடுத்தவர். ஆனா அம்மாவும், அம்மம்மாவும் விடேல. அந்தக் கடன் பிரச்சினையால அம்மாவோட நெடுக சண்டை போடுவார், கடைசியா வெளிக்கிட்டுப் போனதுதான் வீட்ட வரேல"(விடய ஆய்வு 11).

### பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர் கொள்ளுதல்

அட்டவணை 08 இல் கணவனால் கைவிடப் பட்ட பெண்களில் 4.4% ஆனவர்களுக்குப் பாதுகாப்பு ரீதியான பிரச்சினைகள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதன்படி அதிகளவிலான பெண்களுக்கு பாதுகாப்பு ரீதியான பிரச்சினைகள் ஏற்படவில்லை.

**அட்டவணை 8**

*பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர் கொள்ளுதல்*

| விடயம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 13 | 4.4 |
| இல்லை | 281 | 95.6 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

இதனைப் பண்புசார் தரவுகளும் உறுதிப் படுத்துகின்றன. "நான் வீட்டில இருந்து சமையல் வேலை செய்யுறதால யாராலும் எனக்கு எந்தப் பிரச்சினையும் வாறேல மற்றது அம்மா தங்கச்சிமார் பாதுகாப்புக்கு இருக்கினம். வெளில போறதில்லை நிகழ்வுகள் ஒண்டும் கலந்து கொள்ளுறேல. சொந்தக்காரர் வீட்டில ஏதும் விசேஷங்கள் நடந்தால் மட்டும் போவம். மற்ற எல்லா நிகழ்வுகளுக்கும் அம்மா தான் போவா. அதால வெளி இடங்களிலயும் எந்தப் பிரச்சினையும் வாறேல. சுத்திவர சொந்த பந்தம் தான் இருக்கினம் ஏதும் பிரச்சினை எண்டால் ஓடிவருவினம். இரவிலயும் படுக்கிறதுக்குப் பயமில்ல (விடய ஆய்வு 04). "நான் அம்மாவோட இருக்கிறதாலை எனக்கு இதுவரைக்கும் பாதுகாப்புப் பிரச்சினை ஒண்டும் வரேல்லை(விடய ஆய்வு 07). மேலும் "நான் அம்மா வீட்டுக்குப் பக்கத்திலையே வீடு கட்டி இருக்கிறதாலை எனக்குப் பாதுகாப்புப் பிரச்சனை எண்டு ஒண்டும் இதுவரைக்கும் வரேல்லை (விடய ஆய்வு 08).

### பாலியல் சார்ந்த பிரச்சினைகளை எதிர் கொள்ளுதல்

**அட்டவணை 9**

*பாலியல் சார்ந்த பிரச்சினைகளை எதிர் கொள்ளுதல்*

| விடயம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 45 | 15.3 |
| இல்லை | 249 | 84.7 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 09 இல் கணவனால் கைவிடப் பட்ட 294 பெண்களில் 15.3% ஆன பெண் களுக்குப் பாலியல் அச்சுறுத்தல்கள் ஏற்பட் டுள்ளதாக் குறிப்பிட்டுள்ளனர். இத்தரவின் படி அதிகளவிலான பெண்களுக்குப் பாலியல் அச்சுறுத்தல்கள் ஏற்படவில்லை.

Renuka et al. (2013) என்பவர்களால் மேற கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், கணவனால் கைவிடப்பட்ட பெண்களில் குறிப்பாக குழந்தைகள் இல்லாத பெண்கள் இலகுவாக பாலியல் ரீதியான பொருளாகப் பார்க்கப்படும் நிலையானது காணப்படுகிறது. குறித்த ஆய்வின்படி குடும்பத்திலுள்ள ஏனைய ஆண்கள் கைவிடப்பட்ட பெண்களிடம் பாலியல் ரீதியான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளமுயலுகின்றனர் என அவதானிக்கப்பட்டுள்ளது. பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களும் சுரண்டல்களும் வேலைத்தளங்களில் அதிகமாக உள்ளதாகவும் அவர்கள் மறை

முகமாக பாலியல் செயற்பாடுகளுக்கு அழைக்கப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர். இதில் சில கைவிடப்பட்ட பெண்கள் பாலியல் தூண்டுதலுக்கு உள்ளாகியுள்ளதாக ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தி யுள்ளது.

**சமூக நிகழ்வுகளில் பங்குபற்றுதல்**
**அட்டவணை 10**

*சமூக நிகழ்வுகளில் பங்கு பற்றுதல்*

| விடயம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 274 | 93.2 |
| இல்லை | 20 | 6.8 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 10 இல் கணவனால் கைவிடப்பட்ட 294 பெண்களில் 93.2% ஆனவர்கள் சமூக நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களாகவும், 6.8% ஆனவர்கள் சமூக நிகழ்வுகளில் பங்குபற்றாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இதன்படி அதிகமான பெண்கள் சமூக நிகழ்வுகளில் பங்கு பற்றுகின்றனர்.

இதற்குப் பண்புசார் தரவுகள் வலுச் சேர்க்கின்றன. "சொந்தக்காரரர் வீட்டில ஏதும் விசேடங்கள் நடந்தால் மட்டும் போவம். மற்ற எல்லா நிகழ்வுகளுக்கும் அம்மா தான் போவா(விடய ஆய்வு 04).

"நான் எல்லா சமூக நிகழ்வுகளிலயும் போவன். எல்லாரும் என்னைக் கூப்பிடுவினம். போய் உதவி செய்து குடுப்பன் (விடய ஆய்வு 07). "எல்லாத்துக்கும் போறவா அம்மா கூடுதலா அம்மம்மா தான் போறவா(விடய ஆய்வு 11).

**கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சமூக நிகழ்வுகளில் பங்குபற்றும்போது எதிர் கொள்கின்ற சமூகப் பிரச்சினைகள்**

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சமூக நிகழ்வுகளில் பங்குபற்றும்போது எதிர் கொள்ளும் பிரச்சினைகளாக 61.90% ஆனவர்கள் தமது கணவர் விட்டுட்டுப் போனதை கூடியிருந்து கதைப்பதையும், 19.5% ஆனவர்கள் தனது பிள்ளைகள் தவறு செய்ததை நக்கலடிப்பதையும், 9.52% ஆனவர்கள் தான் தமது பிள்ளைகளை வளர்க்கும் விதம் பற்றி தவறான முறையில் பேசுவதையும், 9.52% ஆனவர்கள் ஏனையவர்கள் தம்மை அபசகுனமாக நினைத்து ஒதுக்கி வைப்பதையும் சமூக நிகழ்வுகளில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகக் கூறியுள்ளனர். இதன்படி கணவர் பிரிந்து சென்றதை ஏனைய அயலவர்கள் கூடியிருந்து கதைக்கின்ற காரணத்தினாலேயே அதிகமான பெண்கள் சமூக நிகழ்வுகளில் பங்குபற்றாமல் இருக்கின்றனர் எனக் குறிப்பிடலாம்.

Lotha (2017) என்பவரினால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் கணவனினால் கைவிடப்பட்ட பெண்கள் பெரும் பாலானோர் சமூகத் தொடர்புகளிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் என இனங்காணப் பட்டுள்ளது. குறித்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர் களில் பெரும்பான்மை யானவர்கள் களியாட்ட நிகழ்வுகள், அரசியல் நிகழ்வுகள் அல்லது அயல் வீடுகளுக்குக்குச் செல்வது போன்றவற்றைத் தவிர்க்கின்றனர் அத்துடன் சமூகக் களங்கத்திற்கு உட்படுவதாகவும் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. மேலும் 20% பெண்கள், சுயநலவாதி என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளதுடன் தங்கள் கணவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்காதவர்கள் என்று 20% பெண்களும் 60% ஆன பெண்கள் சீதனம் செலுத்த முடியாதவர்கள் என்றும் சமூகத்தால் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இதனைப் பண்புசார் தரவுகளும் உறுதிப்படுத்துகின்றன. "எனக்கு வாழ்க்கை எண்டு வந்து பிள்ளைக்கும் தாய்க்கும்

வாழ்க்கை குடுத்திட்டான் எண்டு சனம் இழிவாக் கதைக்குதுகள். வெளில தலையும் காட்டேலாது வீட்டுக்குள்ளேயே இருக்கிறன் (விடய ஆய்வு 01). "கதைக்காத ஆட்களோட கதைக்காமல் இருப்பன் கதைக்குற ஆட்களோட கதைப்பன். அதைப் பற்றி எந்தக் கவலயும் இல்ல(விடய ஆய்வு 02).

"விசேசங்களுக்குப் போனா சில பொம்பிளையள் விடுப்புக் கேக்கிறதுக்கெண்டு அங்க வருவினம். உன்ர மனுசன் ஏன் விட்டுட்டுப் போனவர், பிள்ளையின்ர குடும்பச் செலவு எல்லாம் எப்பிடி பார்க்கிறா? பிள்ளை சின்னப் பிள்ளை தானே வேற கலியாணம் கட்டு. உனக்கும் துணை வேணும் தானே எண்டு கேப்பினம். சிலபேர் உண்மையான அக்கறையில கேப்பினம். சிலபேர் விடுப்புக் கேக்கிறதுக் காகவும் மனசை காயப்படுத்திறதுக்காகவும் கேப்பினம். அதால விசேசங்களுக்குப் போறதைக் குறைச்சிட்டன். அப்பிடிப் போனாலும் யாரும் இப்பிடிக் கதைச்சா காதில வாங்காத மாதிரி இருந்திடுவன் (விடய ஆய்வு 06).

மேலும் "நிகழ்வுகளுக்கு வாறவை சிலநேரம் விடுப்புக் கேப்பினம். என்ர மனுசன் விட்டுட்டுப் போனதைக் கூடியிருந்து கதைச்சு என்னை நக்கலடிச்சு சிரிப்பினம் (விடய ஆய்வு 07). "நிகழ்வு எண்டு போனா நாலு பேர் நாலு விதமா கதைக்கிறது வழமை தானே. அதோட நான் ஒரு கைவிடப் பட்ட பெண். என்னைப்பற்றிக் கதைக்க அவைக்கு நிறைய இருக்கும். நான் போற சபையளில என்னை நக்கலடிச்சும் பழி சொல்லியும் கனபேர் கதைப்பினம் (விடய ஆய்வு 08).

"ஏன் எண்டா ஊருக்குள்ள நடக்கிற விசேசங் களுக்கு போனா அங்கை சிலநேரம் அந்தப் பிள்ளையும் வருவா. அவாவையும் என்னையும் பார்த்தா சனங்கள் எல்லாரும் குத்தல் கதை கதைப்பினம் அது தேவை யில்லாம சண்டையக் கொண்டுவரும், அதாலை அந்தப் பிள்ளை வரமாட்டா எண்டு தெரிஞ்சா அங்க போவன், அவா வருவா எண்டு தெரிஞ்சா அந்த வீட்டு விசேஷங்களுக்குப் போமாட்டன், கூடுதலா அவாவோட சண்டைபிடிச்ச வீடுகளின்ர விசேஷங்களுக்குத்தான் நான் போறனான், அப்ப தான் அவா வரமாட்டா எண்டு எனக்குத் தெரியும் (விடய ஆய்வு 10). இப் பண்புசார் தரவானது கருப்பொருள் பகுப்பாய்வின் ஒரு உள்ளடக்கமான சமூக ரீதியாகக் கேலிப்பேச்சுக்கு உள்ளாகுதல் என்ற கருப்பொருளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகுதல்**

**அட்டவணை 11**

*பிள்ளைகள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகுதல்*

| விடயம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 6 | 2.0 |
| இல்லை | 288 | 98.0 |
| மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 11 இல் கணவனால் கைவிடப் பட்ட பெண்களின் குடும்பங்களில் 2% ஆன குடும்பத்திலுள்ள பிள்ளைகள் தமது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி யுள்ளனர்.

**பிள்ளைகள் பாடசாலைக் கல்வியி லிருந்து இடைவிலகுவதற்கான காரணங்கள்**

கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் குடும்பத்திலுள்ள பிள்ளைகள் தமது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய மைக்கான காரணங்களாக 40% ஆனவர்கள் நண்பர்களுடன் சேர்ந்து குடிப்பதாலும், 60%

ஆனவர்கள் தாம் கஸ்டப்படுவதால் தமக்கு உதவியாக இருப்பதற்காக தமது பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியுள்ளதாகக் கூறுகின்றனர்.

Ruwanpura & Humphries (2003) ஆகியோரின் ஆய்வு முடிவு களின்படி கைவிடப்பட்ட பெண்களின் பிள்ளைகளில் 70% ஆனவர்கள் பாடசாலை யில் இருந்து இடை விலகியுள்ளனர். இதற்கு நிதிசார்ந்த நெருக் கடியானது முக்கிய காரணமாக இனங் காணப்பட்டுள்ளது. இதனால் ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக் களைக் கூட பிள்ளைகள் இழந்துள்ளனர் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதனைப் பண்புசார் தரவுகளும் உறுதிப் படுத்துகின்றன. "அப்பெண்கள் சொல்லு கின்ற பிரதான காரணங்களாக அம்மா கஸ்ரப்படுறா என்று தானும் உழைத்துக் குடும்பத்தைப் பார்க்க வேண்டும் என்று கூறுகின்றனர். மேலும் நண்பர்கள் குடிப் பழகத்திற்கு அடிமையாக இருந்தால் சேர்ந்து குடித்தல், படிப்பதற்கு ஆர்வ மின்மை மற்றும் பாடசாலை வகுப்பாசி ரியருக்குப் பயப்படுதல் போன்றனவற்றைக் குறிப்பிடுகின்றனர்(பிரதான தகவல் தரு நருடனான நேர்காணல் 01).

"அப்பா இல்லாமல் அம்மா கஸ்ரப்படுறா. தங்கச்சியும் படிக்கிறாள். இதிலை நான் கம்பஸ் எண்டு போனா கனக்க சிலவு வரும். ஏற்கனவே கடன் நிறைய இருக்கு. எல்லாத்தையும் கட்டி முடிக்க வேணும் எண்டு கம்பஸ் போகமாட்டன் எண்டு சொல்லிட்டான் (விடய ஆய்வு 10).

**கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் தொழில்நிலைக்கும், தெரிவுசெய்யப்பட்ட சமூகக் குடித்தொகைக் காரணிகளுக்கும் இடையிலான இணைவு**

**அட்டவணை 12**

*தொழில்நிலைக்கும், சமூகக் குடித் தொகைக் காரணிகளுக்கும் இடையிலான தொடர்பு*

| சமூகக் குடித்தொகைக் காரணிகள் | $X^2$ | df | P value |
|---|---|---|---|
| வயது | 80.365 | 24 | < 0.001 |
| மதம் | 7.910 | 6 | = 0.245 |
| கல்வி | 63.026 | 18 | < 0.001 |
| வருமானம் | 214.173 | 24 | < 0.001 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 12 இன்படி சமூகக் குடித் தொகைக் காரணிகளான வயது (p = 0.001) கல்வி (p=0.001) மற்றும் வருமானம் (p=0.001) என்பன கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் தொழில் நிலையில் புள்ளி விபரவியல் ரீதியாகக் குறிப்பிடத்தக்க நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. அத்துடன் மதம் (p = 0.245) குறிப்பிடத்தக்க நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்க வில்லை. ஏனெனில் கணவனால் கைவிடப்பட்ட பெண்களில் அதிகமானோர் (84.01%) இந்து மதத்தைப் பின்பற்று கின்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

Kulkarni (2010) என்பவரின் ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், கைவிடப்பட்ட பெண்களில் பெரும்பாண்மையானோர் கல்வியறிவு அற்றவர்களாகக் காணப்படுவதுடன் அதிகமானோர் தரம் 07 இற்கு மேலாக கற்காதவர்களாகக் காணப்படுவதுடன் அவர்களின் மட்டுப் படுத்தப்பட்ட கல்வியறிவானது வாழ் வாதாரத்துக்கான தேர்வுகளை மட்டுப் படுத்துவதாக ஆய்வு முடிவுகள் வெளிப் படுத்துகின்றன.

இத்தகைய கணியம்சார் தரவுகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகள் அமைகின்றன. "தையலாலை மட்டும் வாற வருமானம் காணாது. சில நேரம் வீட்டையும் ஓர்டர் எடுத்துத் தைக்கிறனான். காலமை 9மணிக்குக் கடைக்குப் போனா பின்னேரம் 4.30 மட்டும் தைக்க வேணும். ஞாயிற்றுக் கிழமை லீவு. வீட்டில எடுக்கிற ஓர்டர்களை இரவிலை தைக்கிறனான். அதைவிட 1 கடைக்கு இடியப்பம் அவிச்சுக் குடுக்கிறனான். ஒரு இடியப்பம் 10ரூபா, கிழமையில 3நாள் காலமை 100 இடியப்பம் எடுப்பினம். அதாலையும் வருமானம் கொஞ்சம் வரும். இப்பிடி செய்யிறதாலைதான் என்னால தனிய இருந்து வாழ முடியுது." (விடய ஆய்வு 06).

"அவன் வேலைக்குப் போனால் இவை புதுமணத்தம்பதி மாதிரி வீடியோ கோல் தான் கதைப்பினம். நோமல் கோல் கதைக்க மாட்டினம் இங்கிலிஸ் ஆல மெசேஜ் போடுவினம் ரகசியமா கதைப்பினம் நான் கேட்டால் எனக்குச் சொல்ல மாட்டினம். ஏனெண்டால் என்னட்ட டச் போன் இல்லை எனக்கு இங்கிலிசும் தெரியாது. நான் படிச்சதும் குறைவு எண்டாலும் நான் இவனைக் கட்டுறதுக்கு முதல் என்ர குடும்பத்த உழைச்சுப் பாத்தன். இப்பவும் அவன் விட்டுட்டுப் போனாலும் நான்தான் குடும்பத்த பாக்கிறன்"(விடய ஆய்வு 01).

"எனக்கு சொந்தமா வருமானம் எடுக்கக் கூடியமாரி தொழில் இருக்கு. நான் யாரிட்டயும் உதவி எண்டு போகமாட்டன். எனக்கு இப்ப சின்ன வயசு தானே. எனக்கு வயசு போகும் மட்டும் நான் உழைச்சு குடும்பத்தப் பாப்பன்" (விடய ஆய்வு 10).

**சமூகப் பிரச்சினைகளுக்குப் பயன் படுத்தும் பொறிமுறைகளுக்கும் சமூகக் குடித்தொகைக் காரணிகளுக்கும் இடையிலான இணைவு**

| சமூகக் குடித்தொகைக் காரணிகள் | $X^2$ | df | P value |
|---|---|---|---|
| வயது | 7.204 | 4 | 0.126 |
| மதம் | 6.032 | 1 | 0.014 |
| கல்வி | 9.757 | 3 | 0.021 |
| தொழில் | 15.964 | 6 | 0.014 |
| வருமானம் | 11.563 | 4 | 0.021 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 13 இன்படி சமூகக்குடித் தொகைக் காரணிகளான மதம் ($p = 0.014$) கல்வி, ($p = 0.021$), தொழில் ($p = 0.014$) மற்றும் வருமானம் ($p = 0.021$) என்பன கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தும் பொறிமுறைகளில் புள்ளி விபரவியல் ரீதியாகக் குறிப்பிடத்தக்க நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன.

இந்த கணியம்சார் தரவுகளை உறுதிப் படுத்தும் வகையில் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றன. "ஊருக்கை நடக்கிற எல்லா விசேசங்களுக்கும் போறனான். கலியாண வீடு செத்த வீடு எல்லாத்துக்கும் போறனான். நாங்கள் போனாத்தானே இனம் சனம் எண்டு நாலு பேர் மதிப்பினம். நான் போகேக்கை என்னப்பற்றி ஒண்டும் கதைக்க மாட்டினம், நான் இல்லாத இடத்தலை என்னைப் பற்றியும் நான் வாழ் விழந்ததைப் பற்றியும் கதைக்கினமோ தெரியேலை. கதைச்சாலும் பரவாயில்லை. நான் காது குடுத்துக் கேக்கிறேல்ல"(விடய ஆய்வு 09).

"நான் ஊருக்குள்ள நெருங்கின சொந்தக்காரர் வீட்டை விசேசம் நடந்தா

போய் கொஞ்ச நேரத்தாலை வந்திடுவன். மற்ற ஆக்கள் வீட்டை போக மாட்டன். ஏன் எண்டா ஊருக்குள்ள நடக்கிற விசேசங்களுக்கு போனா அங்கை சிலநேரம் அந்தப் பிள்ளையும் வருவா. அவாவையும் என்னையும் பார்த்தா சனங்கள் எல்லாரும் குத்தல் கதை கதைப்பினம். அது தேவை இல்லாம சண்டையை கொண்டு:வரும். அதாலை அந்தப்பிள்ளை வரமாட்டா எண்டு தெரிஞ்சா அங்கை போவன். அவா வருவா எண்டு தெரிஞ்ச விசேசங்களுக்குப் போகமாட்டன். எல்லாம் முடிஞ்சுது. இனி ஏன் வீண் பிரச்சினையளை எடுக்க வேணும் எண்டதாலை தான் நான் பெரிசா ஒரு இடமும் வெளிக்கிடுறேல்லை. ஆனால் பிள்ளையள்ர பள்ளிக்கூடக் கூட்டம், சிரம தானம், சமுர்த்திக் கூட்டம் எல்லாத்துக்கும் போறனான்" (விடய ஆய்வு 10).

"நான் மரக்கறி யாவாரம் செய்யிற இடத்திலை ஒருதர் அடிக்கடி வந்து கரைச்சல் குடுப்பார். நான் ஒரு கைவிடப்பட்ட பொம்பிளை எண்டதால என்னை என்னவும் பண்ணலாம் எண்டுற நினைப்பு தான் அவருக்கு. குடிச்சிட்டு வந்து அங்க வாறியோ இஞ்ச வாறியோ எண்டு கேப்பர். நான் அப்பாக்கு சொன்னான். அப்பா ஒரு நாள் சந்தைக்கு வந்து அவரை அடிச்சிக் கலைச்சவர். என்ர மகனுக்கும் அது தெரிஞ்சு அவரை அடிச்சுக் கலைச்சு விட்டவள். அதுக்குப் பிறகு அவர் சந்தைப் பக்கம் வாறேல்ல" (விடய ஆய்வு 10).

"பிள்ளயள் சின்ன வயசிலை இருக்கேக்க சில வயசு போன கிழடுகள் வந்து என்னோட சேட்டை விடுவினம். ஒரு நாள் ஒரு கிழவனுக்குக் கிழுவங் கொட்டனால நல்ல குடவை குடுத்துவிட்டன். நான் அப்பிடி அடி போட்டு விட்டதால அவர் அதுக்குப் பிறகு என்னைக் கண்டால் பயத்தில சேட்டை விடுறேல்ல. எங்கட GS இட்டயும் அறிவிச்ச னான். நான் அப்பிடி அடி குடுத்து GS இட்ட அறிவிச்சதாலதான் இப்ப பிள்ளைய ளோடை பாதுகாப்பா இருக்கிறன்" (விடய ஆய்வு 09).

**சமூக மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினை களைச் சமாளிப்பதற்காகக் கொண்டுள்ள பொறிமுறைகள்**

**அட்டவணை 14**

*சமூக மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினை களுக்கான பொறிமுறைகள்*

| விடயம் | | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| சமூகப் | ஆம் | 88 | 29.9 |
| பிரச்சினைக்கான | இல்லை | 206 | 70.1 |
| பொறிமுறைகள் | மொத்தம் | 294 | 100.0 |
| வாழ்வாதாரப் | ஆம் | 197 | 67.0 |
| பிரச்சினைக்கான | இல்லை | 97 | 33.0 |
| பொறிமுறைகள் | மொத்தம் | 294 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து)

அட்டவணை 14 இல் சமூகப் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகளை 29.9% ஆனவர்கள் கொண்டுள்ளனர். இத்தரவின்படி அதிகமானவர்கள் தமக்கு ஏற்படுகின்ற சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகள் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். அதேபோல வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகளை 67% ஆனவர்கள் கொண்டுள்ள அதே வேளையில் 33% ஆனவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கான பொறி முறைகளைக் கொண்டி ருக்கவில்லை. இத்தரவின்படி அதிகமான கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் வாழ் வாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறி முறைகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றதனை அவதானிக்க முடிகின்றது.

### முடிவுரை

இலங்கையில் பெண்கள் கணவனால் கைவிடப்படுதல் அண்மைக்காலம் முதல் குறிப்பிட்ட அதிகரிப்பினைக் காட்டுகின்றது. பெரும்பாலான கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் 36-45 வயதுப்பிரிவினராகக் காணப்படுகின்றனர். மேலும் இவர்கள் இடைநிலைக் கல்வி அறிவினை உடையவர் களாகவே அதிகமாகக் காணப்படுகின்றனர். கணவனால் கைவிடப்பட்ட பெண்களில் 6-11 வருடங்கள் திருமணவாழ்க்கையைக் கொண்டவர்களே மிக அதிகமாகக் காணப் படுகின்றனர். அத்துடன் திருமணமாகி 5 வருடங்களுக்குள் கணவனால் கைவிடப்பட்ட பெண்களே அதிகமாகக் காணப்படுகின் றனர். மேலும் கணவனால் கைவிடப்பட்ட அதிகமான பெண்களின் பிரதான வாழ்வாதாரத் தொழிலாகக் கூலித் தொழில் காணப்படுகின்றது. அவ்வகையில் சேமிப்பின்மை, கடன்களை மீளச்செலுத்த முடியாமை, தொழில் திறனின்மை, நிரந் தரத் தொழிலின்மை, தொழில் அனுபவ மின்மை, கடன் சுமை போன்ற பொருளா தாரப் பிரச்சினைகளை கணவனால் கை விடப்பட்ட பெண்கள் எதிர்கொள்கின்றனர்.

மேலும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளாக குடும்ப ஆதரவை வழங்க முடியாமை, திருமணத்திற்கு அப்பாலான உறவுகள், கல்வியறிவு மற்றும் திறனின்மை, அடையாளங்கள் வெளிப்படுத்தப்படாமை, சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டுதல், பாலியல் துன்புறுத்தல், குறை வான கல்வியறிவு, பாலியல் துஷ்பிரயோகம், வாய்மொழி மூலமான துஷ்பிரயோகம், சமூக ஆதரவின்மை, குடும்பத்தைப் பாது காப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளல், சமூகப்புறமொதுக்கல், சமூகப் பதுகாப் பின்மை, சமூக அங்கீகாரம் இன்மை, தற்கொலை, பிற குடும்பத்தில் தங்கியி ருத்தல், மனச்சுமை மற்றும் குறைவான சுயமதிப்பு போன்றன காணப்படுகின்றன. எனினும் அதிகமானவர்கள் தமது குடும்பத் துடனேயே வசிப்பதனால் பாதுகாப்புப் பிரச்சினைகள் மற்றும் பாலியல் பிரச்சி னைகள் என்பவற்றை எதிர்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். அவ்வகையில் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் பிரிவினை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அதிகளவில் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பது இந்த ஆய்வின் முடிவுகளாகக் காணப்படுகின்றன.

### பரிந்துரைகள்

பொதுவாக இலங்கைக் கலாசாரத்தில் பெண்கள் தமது பெற்றோர் அல்லது கணவன் கவனிப்பில் இருப்பதால் சுயாதீனமாக நிர்வகிக்க எதிர் பார்க்கப்படுவதில்லை. கணவனால் கைவிடப்பட்ட பெண்களைச் சுயாதீனமாக நிர்வகிப்பதற்கு ஒரு சிறப்பு ஆதரவுப் பொறிமுறைகள் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வன்முறையிலிருந்து பாதுகாக்கவும் தேசிய அளவிலான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக் கான வாழ்வாதார உதவிகள் சமூகக் கலாசாரப் பின்னணியைக் கருத்திற் கொண்டு செயற்படுத்த வேண்டியது அவசியமாகும். உள ஆற்றுப்படுத்தல் பயிற்சிகள், தலைமைத்துவப் பண்பு களையும், தற்துணிவுகளையும் வளர்க்கும் பயிற்சிகள், பால்நிலை சார் வலுவூட்டல் பயிற்சிகள், சந்தைப்படுத்தக்கூடிய தொழில்களுக்கான பயிற்சிகள்,

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் போன்ற பல வகையான பயிற்சிகளைக் கொடுத்த பின்னர் அவர்கள் எந்தத் தொழிலும் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

சட்ட நடவடிக்கைகள், தண்டனைகளைக் கடுமையாக அமுல்ப்படுத்த வேண்டும். திருமணத்திற்கு அப்பாலான உறவில் ஈடுபடும் அனைவருக்கும் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுக் கடுமையான தண்டனைகளை வழங்குதல் வேண்டும்.

பிள்ளைகளின் கல்விக்கான வசதி களினை ஏற்படுத்திக் கொடுத்தலுடன் பாடசாலைக் கல்வியில் இருந்து இடை விலகிய மாணவர்களுக்கான விசேட தொழில் வழிகாட்டல்களையும் மேற் கொள்ளல் வேண்டும். அத்துடன் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கான விசேடமான கற்றல் உபகரணங்களை வழங்கி மாணவர் களது கற்றலை ஊக்கப்படுத்தல் அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

Ahmed, N. (2018). Survival Patterns of Deserted Women in Bangladesh, Bangladesh. Retrieved from: http://www.hrpub.org

Ahmed, N., & Ahmmed, F. (2015). Problems and challenges of Deserted Women in Bangladesh: An Observational study, Journal of International Social Issues, Bangladesh. Retrieved from: http://www.scholar. google. com

Asagi, R. E., & Kazi, S. A. (2012). Women Desertees: Post-Desertion Problems. Department of MSW, Karnataka State Women's University, Bijapur, Karnataka, INDIA; Dept. of Social Work and Dean of Social Sciences, Karnataka State Women's University, Bijapur, Karnataka, INDIA. Retrieved from: http://www.isca.in

Asagi, R., & Kazi, A. (2012). Family disorganization and woman desertion by Marital Background: A Social work study. Retrieved from: http://www.shodhganga. inflibnet. ac.in

Department of Social Services Statistics in Nothern Province. (2018). Nallur, Sri Lanka. Retrieved from: https://np.gov.lk

Fokus Women. (2015). A Report on the Status of Female heads of Households and their access to Economic, Social and Cultural Rights, Anuradhapura District: Kebethigallewa and Mahavilachchiya, British High Commision, Colombo, Sri Lanka. Retrieved from: https://d3jkvgmi357tqm, cloudfront. net

Gajathri, P. (2018). Economic Issues Related to Female-Headed Housholds in Rural Areas in Sri Lanka, Centere for Gender Studies, Dalugama, Kelaniya, Sri Lanka. Retrieved from: https://www.researchgare.net

International Labour Organization – ILO. (2007). ABC of Women Workers' Rights and Gender Equality. Retrieved from: https:// www. ilo.org

Kulkarni, S. (2010). Issues and Concerns of Deserted Women in Maharashtra. Retrieved from: https://www.researchgate. net/ publication/265564498

Kulkarni, S., & Bhat, S. (2010). Issues and Concerns of Deserted Women in Maharashtra, Orient Blackswan PVT Ltd, India. Retrieved from: https://books. google. lk

Lotha, D. (2017). A Socio-economic Study of the Deserted Women by NRI's in Punjab (Master's dissertation). Lovely Professional University, Phagwara, Punjab, India. Retrieved from:https://www. researchgate. net/publication/265564498_Issues_and_Conc

erns_of_Deserted_Women_in_Maharashtra
National Institute of public cooperation and child Development. (2007). A study on Desertion of Married Women by Non-Resident Indians in Punjab and Andra Pradesh, Viba press, New Delhi, India. Retrieved from: https://www.nipccd-earchive. wcd.nic.in
Ruwanpura, K., & Humphries, J. (2003). Female-headship in Eastern Sri Lanka: A comparative study of ethnic communities in the context of conflict, Sri Lanka. Retrieved from: https://www.researchgate.net
United Nations, Sri Lanka. (2015). Mapping of Socio- Economic Support services to Female Headed Households in the Nothern Province of Sri Lanka, Horizan printing, Sri Lanka. Retrieved from:https://srilanka. unfpa.org
யாழ்ப்பாண மாவட்டச் செயலகம். (2020). யாழ்ப்பாண மாவட்டச் செயலக அறிக்கை, யாழ்ப்பாணம்.
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகம். (2020). வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகர் ஆண்டறிக்கை. கரவெட்டி: வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகம்.